# புராணங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

முனைவர் பு. எழிலரசி,
*துறைத்தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர்*
*செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*ஓசூர் - 635 126*

## முன்னுரை

முத்தமிழ் மொழியில் தோன்றிய சங்க இலக்கியங்கள் அகப்பொருள் இலக்கியம், புறப்பொருள் இலக்கியம் எனவும் பிரிந்து, பேரிலக்கியம், சிற்றிலக்கியம் எனப்பகுக்கப்பட்டுள்ளன. முற்காலத்தில் நம் நாட்டின் பெரும்பாலான பகுதியில் புராணங்களே இயற்றப்பட்டுள்ளன. தமிழிலும் பல புராண இலக்கியங்கள் தோன்றியுள்ளன. வடமொழியாகிய சமஸ்கிருதம் பல புராணங்களைப் படைத்துள்ளது. அவற்றுள் மொழிப்பெயர்ப்பு நூல்களே மிகுதியாகும். தமிழில் தோன்றிய புராணங்களில் மிகுதியானவை தலப்புராணங்கள்.

## புராணம் என்பதன் விளக்கம்

புராணம் என்பது பழைய வரலாறுகளைக் கூறும் பொருளுடைய நூலாகும். பழைய வரலாறு என்பது கடவுளர்களின் வரலாற்றை விரித்துரைப்பதாகும். " எல்லாச் சமயங்களும் தாம் போற்றும், தொழும் இறைவன் பழமை வாய்ந்தவன் என்றே கூறுகின்றன".

"பொருளன் புனிதன் புராணன் புலவன்"[1]

"புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்"[2]

என வரும் சிலம்பு, மேகலை தொடர்களல் இதனை அறிய முடிகிறது.

பழைய வரலாறு என்பது கடவளர்களின் பிறப்பு, போர் நிகழ்ச்சிகள், திருவிளையாடல்கள் அகியவற்றை விரித்துரைப்பதாகும்.

பழமை என்னம் பொருளை தருவனவாக தொல்லை, முன், புராணம், முந்தை, தொன்மை, தொன்று, ஊழ், புர்வம், பண்டு, நல்லை, புராதனம், நீதம், பழமை என்ற பதின்மூன்று சொற்களை நாம தீப நிகண்டு கூறுகிறது. அவற்றுள் புராணம் எனற சொல்லும் ஒன்றாகும். பழைய பண்டைய வரலாறு என்னும் பொருளைத் தருவனவாக


© 2023, IRJTSR

மூதுரை, புராணம், முதுசொல், கதை என்னும் நான்கு சொற்களையும் நாம தீப நிகண்டு கூறுகிறது.

இப்படிப்பட்ட புராணம் " ஒருவன் பொருளைக் கொடுத்து கள்ளை உண்டு தன்னையே மறக்கும் நிலை" போன்று, தன்னைப் படிப்பவர்களின் நிலையினை மறக்கச் செய்ய வேண்டும்.

" கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து

மெய் யறியாமை கொளல்".(3)

என்னும் வள்ளவரின் கூற்று புராணத்திற்கு பொருந்தும்.

புராணங்களின் தோற்றம்

புராணங்கள் முதலில் வடமொழியில் தோன்றியதாகும். வடமொழியில் வேதத்திற்கு அடுத்ததாக வைத்து எண்ணப்படும் புராணங்கள் பீடும், பெருமையும் கொண்டனவாக கருதப்படுகின்றன. இவ்வடமொழிப் புராணங்களின் செல்வாக்கு தமிழிலக்கிய உலகில் நுழைந்து தன் ஆதிக்கத்தைச் செலுத்தியது.

"புராணங்கள் தமிழ்நாட்டின் முதல் நூல்கள் அல்ல. புராணங்கள் வேறு உலகினின்றும் நம் நாட்டில் குடியேறின. புராணம் திழ்நாட்டில் புகுந்தப்பின்னர் தமிழரும் புராணம் என்ற சொல்லை ஆட்சியில் கொணர்ந்தனர்".(4)

என்னும் திரு.வி.க.வின் கூற்று இக்கருத்திற்கு வலு சேர்ப்பதாகும். இச்சொல் தமிழ் இரட்டைக்ககாப்பிய காலத்திலேயே வந்துள்ளமையால் "புராணம்" மிகப் பழமையானதாக் கொள்ளலாம்.

"காதல் கொண்டு கடல்வண்ணன் புராணம்

தினன் நாரணன் காப்பொன்று நுரைத்தனன்".(5)

என்ற தொடர் புராணத்தின் பழமையை உணர்த்தும்.

"வான் பியுட்டனென் என்பாரின் கருத்துப்படி புராணம் மகாபாரதம் முடிவடைந்தப்பின் தோன்றியதாகும். புராணஙங்களின் தனிச்சிறப்பு என்னவென்றால் கடவுளின் சக்தியையும், வேலைகளையும் கூறுவதேயாகும்."(6)

“புராணங்கள் சமய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகும். தொடக்கக் காலத்தில் செவிவழியாக வழக்கில் வந்த சமயத் தொடர்பான வரலாறுகளே புராணங்களாகக் கருதப்பட்டன. பின்பு அவை நூல் வடிவில் உருவாயின.“(7)

“வேறு ஒரு சாரார் புலவர் வகையைச் சார்ந்த சூதர் என்பவரே ஆதியில் புராண இலக்கியங்களை இயற்றினார். அடுத்து மகாபாரதத்தை இயற்றிய வேதவியாசர் கலியுகத் தொடக்கத்தில் பதினெண் புராணங்களையும் இயற்றியதாக கொள்வர் எனவும் வையாபுரிப்பிள்ளை கூறியுள்ளார்.“(8)

“அர்த்த சாஸ்திரம்“ நீதி நெறியில் செல்லும் அரசக் குமாரர்களுக்கு புராணங்கள் மூலமாக அறிவு புகட்டவேண்டும் என்று கூறுகிறது. அக்காலத்தில் பௌராணிகர்கள் இருந்தனர் என்றும் தெரிவிக்கின்றது. ஆனால் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் கி.மு. 4-ம் நூற்றண்டில் தோன்றியது. எனவே 4-ம் நூற்றாண்டில் புராணங்கள் இருந்தன என்பதற்குச் சான்றாக கூறுதல் தகாது“(9) என்கிறார் பா. கோபாலன்.

அதே போல புராணங்களில் சிலவற்றின் காலம் உறுதியாக தெரியக்கூடியதாகவும் உள்ளது. பத்ம புராணம் இரவி சேணன் என்பவரால் கி.பி. 66-ல் இயற்றப்பட்டது.

“பாணகவி“ க.பி.625 - ல் தம்முடைய ஹர்ச சரித்திரத்தில் கருதிஷ்டி என்பவர் வாயு புராணம் வாசிக்க, தாம் கேட்டமைதைத் தெரிவிவக்கிறார். “9 -ம் நூற்றாண்டைச் சார்ந்த ஆதி சங்கரரும், 11 - ம் நூற்றாண்டை சார்ந்த இராமானுஜரும் புராணங்கள் பழையன என்று கூறி தங்கள் கொள்கைகளுக்கு ஆதாரமாக புராணங்களிலிந்து சுலோகங்களை தந்துள்ளனர்“(10)

எனவே இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை

“புராணமாகிய பழங்கதையை உயர்ந்தது எனப் போற்றி சமணர்கள் பிராகிருத மொழியில் 'ஆதிப்புராணம்' என்ற நூலினைப் படைத்தனர்.அதில் தீர்த்தங்கரன் வரலாறும், அந்த வரலாற்றினிடையே அவரவர் காலத்தே வாழ்ந்த அரசர்கள் கதையும், வாசுதேவர்,பிரதிவாசுதேவர்கள் வரலாறும் கூறப்பட்டுள்ளன.”(11)


© 2023, IRJTSR

“தமிழில் முதல்முதலில் புராணம் என நாம் அறியக்கிடப்பன புராண சாகரமும், சாந்திபுராணமும் ஆகும். இவற்றின் காலம் 10, 11 - ம் நூற்றாண்டாகும்”.(12) இப்புராணங்கள் ஆன்றோர்களால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறபடும் ஏராளமான கதைகளைத் தன்னகத்தே கொண்டு இயங்குகின்றன.

**புராணங்களின் தனித்தன்மைகள்**

அமரசின்ஹா என்னும் வடமொழி வல்லுனர் கி.பி.5 -ம் நூற்றாண்டிலேயே புராணத்தைப் பற்றி விளக்கியுள்ளார். அவரத கருத்துப்படி புராணங்களுக்கு ஐந்து தனித்தன்மைகள் உண்டு.

1. உலகைப் படைத்தல்
2. அவற்றை அழித்தல, புதுப்பித்தல்
3. கடவுளின் பெருமைகளைக் கூறுவது.
4. மன்னர் வழி வந்த அரசைப்பற்றிக் கூறுவது
5. சந்திரகிரஹணம், சூரியகிஹணம், அரசர்களைப் பற்றி விளக்குதல்.(13)

எல்லாப்புராணங்களுக்கம் இந்த ஐந்து தனித்தன்மைகளும் பொருந்தாது. விளக்கமாகக் கூறவதும் இல்லை.

**புராணங்களின் காலம்**

புராணங்கள் கி.மு.4 அல்லது 5ம் ம் நூற்றாண்டிலேயே இருந்தது என்பர் அறிஞர் பெருமக்கள். ஆனால் அது பொருந்தாது என்பதை லிண்டர் கீட்ஸ் தமது “இந்திய இலக்கியவரலாறு” என்னும் நநூலில் கூறியுள்ளதாக, “கந்தபுராணத்தில் பக்தி நிலை” என்னும் நூல் வழி பா. கோபாலன் பின்வரும் கருத்துக்களைக் கூறியுள்ளது இவண் நோக்கத்தக்கதாகும்.

“அர்த்தசாஸ்திரம் நீதி நெறியில் செல்லும் அரச குமாரர்களுக்கு புராணங்கள் மூலமாக அறிவு புகட்டவேண்டுமென்று கூறுகிறது.”(14)

**தமிழில் புராணங்கள்**

வடமொழியில் வேதத்திற்கு அடுத்து சிறப்பான இடத்தைப் புராணங்கள் பிடித்துள்ளன. புராணம் எனற சொல் தமிழ்பழங்கால இலக்கியங்களில் காணப்படுவதால்

வடமொழியில் இருந்த புராண இலக்கியங்கள் தமிழிலும் பழங்காலந்தொட்டே இருந்தன என்பது புலனாகிறது. சான்றோர் வரலாற்றைப் புராணம் என வழங்கும் வழக்கு இந்து, சமண வழக்கை ஒட்டித் தமிழ்நாட்டில் வளர்ந்தது எனலாம். இப்புராணக் கதைகள் மனித குலத்திற்கு உய்தி உண்டு என்று உணர்த்த தவறவில்லை. துன்பம் மிகுந்த உலகில் இறைவன் தம்மை கடைத்தேற்றுவான் என்ற நம்பிக்கையைப் புராணங்கள் மக்கள் மனதில் நிலை பெறச் செய்தன. மக்கள் விருப்பத்திற்கிணங்க இயற்றப்பட்ட தலப்புராணங்களுள் முதல் புராணம் உமாபதி சிவாச்சாரியார் பாடிய சிதம்பரத்தைப் பற்றிய கோயிற்புராணமாகும்.

இப்புராணத்தை அடிப்படையாகக் கொண்டு பல புராணங்கள் தமிழகத் தலங்களின் மீதுப் பாடப்பட்டன. கி.பி.14 - ம் நூற்றாண்டிலிந்து 19 - ம் நூற்றாண்டு வரை தலப்புராணம் பாடும் மரபு நீடித்தது. அதன் விளைவாக காஞ்சிப் புராணம், சிதம்பரப் புராணம், சேது புராணம், திருவிளையாடற்புராணம், திருக்குற்றாலத் தலபுராணம் போன்ற புராணங்கள் தமிழில் தோன்றி இலக்கியத்தில் தடம் பதித்தன.

புராண இலக்கியம்

இறைவனின் உண்மை, பராபரத்தன்மை, வணங்கும் முறை, புசை, வேள்வி முறைகள், இறைவன் முன் வைக்கும் வேண்டுகோள், நன்மை நலம் பயக்க, தீவினை அகல, அறநெறிகள் பெருக போன்றவற்றை உயர்த்துவன வேதம், ஆகமம், உபநிடதம், சித்தாந்தம் போன்றவை. இவ்வரி உயரிய நெறிகள் எளியோர் முதல் ஏற்றமுடையோர் வரை அனைவரின் வாழ்க்கைக்கும் இன்றியமையாத அறநெறி விதைகளாகும். இதன் சாரமே புராணங்களாகும்.

“மறைநூல்களின் சாரங்களை அனைவருக்கும் எடுத்து இயம்ப சிறந்த ஞானிகளும் சான்றோர்களும் எளிய முறையில் கதையைப் புகுத்தினார்கள். அந்தக் கருத்துக்களின் தொகுப்பே புராண இலக்கியங்களாகும்.”15

“பண்டைய இதிகாசங்கள் இராமாயணம், பாரதம் போன்றவற்றைச் சுவைபட ஒருவர் எடுத்துக் கூறினால் அதை மக்களும் விரும்பிக் கேட்பர் எனவே புராண நூல்கள் சாகா வரம் பெற்றவை. காலத்தால் அழியாதவை. பி எல்லா வகை இலக்கியங்களைக்

காட்டிலும் மக்களால் போற்றும் இலக்கியம் புராண இலக்கியமே."16 என்ற கூற்று புராண இலக்கியத்தின் சிறப்பை உணர்த்தும்.

## புராண இலக்கணம்

புராணம் என்பது ஞாலத் தோற்றத்தை எடுத்தியம்புவது. உலக உயிர்களின் ஒழுக்க நெறிகளை உணர்த்துவது. உலகத் தோற்றம், ஊழிக்கால வரலாறு போன்றவைகளை இயம்பி புராண இலக்கியம் ஒரு அறிவியல் நூலாக மிளிர்கிறது. துறவியரின் மரபு, மன்னர் மரபு போன்றவற்றைப் பட்டியலிட்டு காட்டும் பண்பால் ஓர் அரசியல் வரலாற்று நூலாக தோற்றமளிக்கின்றது. மேலும் 'சங்க கால இலக்கியங்களுக்குத் துணைபுரிந்த நூல்களின் புராணமும் ஒன்றாகும்'. இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுக்கும் பாட்டியல் நூல்கள்,

"பிள்ளைக் கவி முதல் புராணம் ஈறாகத்
தொண்னூற்று ஆறெனும் தொகைய தாகும்." - பிரபந்த மரபியல்

என புராணத்தையும் இலக்கியத்தையும் ஒன்றாக பிரபந்த மரபியல் காட்டுகின்றது. மேலும் புராண இலக்கியத்தை,

"அறமுதல் நான்கினும் ஆக்கப் பெறுவது"17
காப்பியப் புராணமகக் கருதப் பெறுமே." - பன்னிருப் பாட்டியல்

என்று காப்பிய நிலையில் வைத்து பன்னிருப்பாட்டியலும் இலக்கணம் வகுக்கின்றது.

## புராண வகை

உலக அறிவுக்கு, உள்ளப் புத்துணர்ச்சிக்குத் தூண்டுதலான புராணங்கள் பல்வேறு வகையில் பகுக்கப்பட்டுள்ளன. புராண இலக்கியங்களைக்,

1. மகா புராணங்கள்
2. உப புராணங்கள் என இருபிரிவுகளாக அடக்கி கூறும் மரபு தமிழில் உண்டு.

மாகாப் புராணங்களை பதிணென் புராணம் என்றும் குறிப்பிடுவர். சமயப் புராணங்களை சைவப்புராணம், வைணவபுராணம் என இரண்டாகப் பிரிப்பர்.

உலகிலுள்ள மிகுதியான புராண நூல்கள் தல புராண வகையில் அடங்கும். எல்லாப் புராணங்களும், இறைவனின் சிறப்பு, தலத்தின் மேன்மை, அத்தலத்தில்

எழுந்தருளியுள்ள இறைவனது பெருமை, அவனது திருவிளையாடல்கள் ஆகியவற்றையே பெரும்பாலும் இயம்புகின்றன.

பதிணென் புராணங்கள்

பொதுவாகப் புராணங்கள் பதிணெட்டு என்னும் மரபு தொன்று தொட்டு வழங்கி வருகிறது. பதிணென் புராணங்களைப் பற்றிய பழம்பாடல் இதன் உண்மையை உணர்த்தும்.

“பிராமணர் பதுமம் வைணவம் சைவம்
பேர்ல கேத் பாகவதம்
அருள்தரு நாரதீய மார் கண்டம்
கருதரும் பொருள்சேர் பிரமகை வர்த்தம்
இலிங்கம் வராகம் மேய்காந்தம்
மருவுவாமனம் சொற் கூர்மம் நீண்மச்சம்
காரும் சிறந்தவா யவியம்.”18

என்னும் பாடலே பல்வேறு புராணங்களிலும் காணப்படுகிறது.

ஆனால் திவாகர நிகண்டு இதே பதிணென் புராணங்களின் பட்டியலை வேறு விதமாகச் சுட்டுகிறது.

“மச்சம் கூர்மம் வராகம் வைணவம்
பத்மம் பிரம்மம் பாகவதம் சைவம்
மார்கண்டேயம் காந்தம் வாமணம் காருடம்
பிரமாண்டம் லிங்கம் பிரமகை வர்த்தம்
பவுடிகம் நாரதம் ஆக்கினேயம்
பாற்படு பதிணென் புராணம் என்பர்”19

என்றப் பாடலில் பதிணென் புராணங்களின் பட்டியலைக் காண்போம்.

இப்பதிணென் புராணங்களேயன்றி உப புராணங்கள் என வழங்கப்படும் பதினான் புராணங்களும் உள்ளன. அவை

1. சன குமார புராணம்
2. சிவதரும புராணம்

3. துரவாச புராணம்
4. நாரத புராணம்
5. கபில புராணம்
6. அவுசண புராணம்
7. சௌமிய புராணம்
8. வருண புராணம்
9. காசுர புராணம்
10. வாசிட்டலிங்க புராணம்
11. மாவை புராணம்
12. சௌர புராணம்
13. சாம்பேச புராணம்
14. பார்கவ புராணம் என்பனவாகும்.

அறுவகை குணங்கள்

இப்புராணங்களை விரிவு படுத்தினால் அவை கடவுளின் குணாதசயங்களையும், புனிதத் தன்மையையும், நாம் அறியாதக் கருத்துக்களையும், ராசக்களின் தன்மையையும் கூறுவதாக இருக்கும். தூய்மையானக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பொழுது அறுவகை குணச்சித்திரத்தை கவனப் படுத்துகின்றன.

“விஷ்ணு சரடா பகவதா கருடா பத்மா மற்றும் வராஹா”[20]

என்பவையே அக்குணங்களாகும்.

முதலாவதாக, இக்குணங்களின்படி திருமால்தான் முழுமுதற்கடவுள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவதாகக் கூறுகையில் சிவனுக்கே முதலிடம் என்றும், அவரைத்தான் தொழுதல் வேண்டும் என்றும் இப்புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான சிறப்பமசகளாக,

மட்சய, கூர்ம, லிங்க, சிவா, ஸ்கந்தா மற்றும் நெருப்பு ஆகியவை கூறப்பட்டுள்ளன.

மூன்றாவதாக பிரம்மா, வாமனா, பிராமந்தா, பிரமவைவந்தா, மார்கண்டேயா, பவிஷ்யா ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

எல்லாப் புராணங்களும் வெவ்வேறு மொழியில் எழுதப் பட்டிருந்தாலும் விஷ்ணு புராணமும், பாகவதமும்தான் உலக அளவில் பேசப்படுகின்றன. புராணங்களில் பொதுவானக் கருத்துக்கயைக் கூறுவதாக எண்ணத் தோன்றினாலும், இந்து மதத்தைப் பற்றிய அதிகம் கூறுவதாக மக்களிடையே ஒரு கருத்து நிலவுகிறது.

### சான்றெண் விளக்கம்

[1] சிலப்பதிகாரம், பத்தாம் காதை, பாடல் வரி - 179.

[2] மணிமேகலை, மணிமேகலை தெய்வம் வந்து தோன்றிய காதை, பாடல் வரி - 98

[3] திருக்குறள், கள்ளுண்ணாமை, குறள் 925.

[4] திரு.வி.க. முருகன் அல்லது அழகு, ப.207

[5] மணிமேகலை, சமய கணக்கர் தந்திவை கேட்ட காதை, பாடல் வரி -98,99

[6] இணையக்கருத்து

[7] வையாபுரிப்பிள்ளை, இலக்கிய உதயம், ப. 286

[8] மேலது, ப. 289

[9] கோபாலன். ப, கந்தபுராணத்தில் பக்திநிலை, ப. 30

[10] மேலது, ப.30

[11] மேலது, ப. 32

[12] மேலது, ப.32

[13] இணையக்கருத்து,

[14] கோபாலன். ப, கந்தபுராணத்தில் பக்திநிலை, ப. 42

[15] மாணிக்கம். அ, திருக்கூவப்புராணம் முன்னுரை ப. 5

[16] மேலது, ப. 5

[17] திவாகர நிகண்டு, நூற்பா, 2453

[18] இணையக்கருத்து,

[19] அருணகிரிநாதர், திருப்புகழ் பாடல், எண் 10